Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி௵ (1889) ஆனிமீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௯] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி௵ வைகாசி மீ ௧௧உ வெள்ளிக்கிழமை (24 MAY. 1957) [இல- ௭]

அரசியல் அலை

## மூன்று நாள் உபதேசம் மூர்க்கத்தை மாற்றுமா?

### வேடத்துக்குள்ளே விஷமத்தனம் வேரூன்றிவிட்டதா?

காதிலே உபதேசம் ஓதினாலும் கடுகளவேனும் பயன் படுத்தாதவர்களுக்குப் புலவர்கள் காட்டும் உவமை மிகப் பொருத்தமானது. அரசியலிலே யார் உபதேசஞ் செய்தாலும் அணு அளவும் அசையாதிருக்கும் அமைச்சர்களுக்கும் அந்த வகையிலே உவமை எடுத்தாளுதல் சாலும். நேருப் பெரியார் மூன்று நாட்களாக உபதேச மாரி பொழிந்தார் புத்த மதப் போதனைகளை எடுத்து விளக்கினர். எல்லாவற்றையும் முதல் அமைச்சர் பண்டாரநாயக கேட்டுக்கொண்டேயிருந்தார். கேட்டும் பயன்தான் என்ன என்றவகையிலே இலங்கை அரசியல் நடைமுறை பழையபடியே நடைபெறுகின்றதே.

சந்தன மரத்தோடு சார்ந்த பூண்டும் நறுமணம் வீசும் என்பது உண்மை. ஆனல் அந்த இரவல் அலங்காரம் வெளிப் பூச்சேயல்லாமல் உள்ளஞ் செறிந்ததாக இருக்கமாட்டாது. அதுபோலப் பாரதப்பிரதமரின் நிழலிலே நின்று பேரும் புகழும் பெற்றுவிடலாம் என்று எண்ணுகின்ற திரு. பண்டாரநாயக அவர்களே! நீங்கள் எத்தனை நாட்களுக்கு இத்தனை வேடம் போடப்போகின்றீர்கள்...? வேடத்துக்காகவாவது சிறிதளவேனும் உள்ளக் கிடக்கையை மாற்றிவிடப்படாதா?

புத்தமதப் பஞ்சசீலம் என்றால் என்ன அரசியல் ஐம்பெரும் குணங்கள் என்றால் என்ன இவற்றில் எங்கேயாவது ஒரு மொழியை ஒரு மதத்தை ஒரு இனத்தைத் தரங்குறைப்பது சரியென்று கூறப்பட்டிருக்கின்றதா? என்று புத்த சயந்திப் பொழுதின் பெருமை அகல முன்னர் முதல் அமைச்சர் மனச்சான்றுடன் சொல்லுவாரா?

பாரதநாட்டு வீரரை வரவழைத்து மாபெரும் உபசாரம் செய்து வைத்தீரே. அந்நாட்டு மக்க இத்தேசத்திலே பாரம்பரியமாக வாழ்ந்து வந்தும் அரசியல் அனாதைகளாகக் கணிக்கப்படுவதை நேருப் பெரியார் நெஞ்சம் அறியாதென்று அல்லது அறிந்தும் உபசார உணர்ச்சியினால் மறந்துவிடுவாரென்று இலங்கைப் பிரதமரே எண்ணுகின்றீரா?

நாடற்ற இலங்கை வாழ் இந்தியரின் நிலைமை பற்றி இலங்கை அரசாங்கத்தின் மனநிலை அப்படியேதான் இருக்கிறதென்று நேருப் பெரியார் இந்திய பாராளுமன்ற மக்கள் சபையிற் கூறவேண்டி வந்ததென்னையோ?

சனநாயக ஆட்சியிலே இன வேறுபாடிருக்க முடியாதென்று பாரதப் பிரதமர் கூறுவதை முக்காலமும் உண்மையென்று பிற்பாட்டுப் பாடும் பிரதமர் பண்டாரநாயக, நீங்கள் இனவேற்றுமையை வளர்த்து வருவதை நேருப்பெரியார் அறியார் என்று நினைக்கின்றீரா?

தாமரையிலையிலே தண்ணீர் ஊற்றினற் போன்று பற்றிக்கொள்ள முடியாது சற்றும் அமைவில்லாத உங்கள் இதய தாமரையிலையிலே தண்ணளியான உபதேச நீருற்று எங்ஙனம் நிலைகொள்ளும். திரு. பண்டாரநாயக அவர்களே சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்!

## இலங்கைத் தொழிலாளர் சனநாயக மாநாடு

### மொழிச் சமத்துவம்பற்றி ஸ்ரீ தொண்டைமான் முழக்கம்

இலங்கைத் தொழிலாளர் சனநாயக மகாநாட்டின் பதினறுவது ஆண்டு விழா கம்பளையில் பெரிசுந்தர நகரில் திரு எஸ். தொண்டைமான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல்வேறு அரசியற்கட்சித் தலைவர்கள் சமுகமளித்தனர். திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், சி. வன்னியசிங்கம். ஜீ. ஜீ. பொன்னம்பலம். வி. குமாரசாமி, ஏ. அமிர்தலிங்கம், வி. ஏ. கந்தையா ஆகியோர் குறித்த கட்சிகளின் பிரதிநிதிகளாயமைந்தனர்.

திரு. தொண்டைமான் தமது தலைமைப்பேருரையில் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை வன்மையாகக் கண்டித்தார். முதல் மந்திரியும் அவருடைய கட்சியாரும் இந்நாட்டைச் சிங்கள மயமாக்கும் பிற்போக்கான கொள்கையில் வெளிப்படையான மாற்றமுண்டாக்காவிட்டால் விரும்பக்கூடாத ஓர் நிலைமைநாட்டில்உண்டாகக் கூடும். ஐக்கிய சனநாயகக் கொள்கை மூலமாய் மொழிப்பிணக்கைத் தீர்க்கலாமென்று நான் திடமாக நம்புகிறேன். நாங்கள் உட்பட நாட்டு மக்கள் பலர் காட்டிய நல்லெண்ணத்துக்குப் பதிலாய் அரசாங்கக் கட்சியார் அமைத்த சில சட்டங்களும் செய்த செயல்களும் நம்பிக்கையீனத்தை உண்டாக்கிவிட்டன. சிங்கள மக்களும் தமிழ் மக்களும் பல நூற்றாண்டுகளாய்ச் சமாதானமாய் வாழ்ந்திருக்கின்றனர். அந்நிலைமையை மாற்றிய பண்டாரநாயக அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. சிங்களமும் தமிழும் சனநாயக முறையில் சமத்துவமாய் அமைந்தால் மாத்திரமே ஒற்றுமையான ஓர் இலங்கையை நாம் காணலாம் என்று அவர்எச்சரிக்கைசெய்தார்.

## இம்மை மறுமை இன்பந் தருவது இல்லறமே

### இல்வாழ்க்கை எழில்பெறுதற்கு இல்லாள்மாண்பு இன்றியமையாதது

சிற்றின்பத்தாலும், அறங்களினாலும் பேரின்பமாகிய மறுமைப் பயனை அறிந்து அடைவதற்கு அருள் நியதியுடன் உண்டாக்கப்பட்ட ஒப்பற்ற சாதனமே இல்லறம். ஒத்த அன்பு, அறிவு பண்பு உடைய ஆடவர் பெண்டிர் இணைந்தாலன்றி இல்லறம் இனிது நிகழாதென்பது உலகறிந்த உண்மை. இது அனுபவமும், வள்ளுவர் திருமறையின் வாய்மொழியுமாகும். ஒத்த மனப்பான்மை அன்புபூண்ட ஆடவர், பெண்டிர் இல்லறத்தையும் பண்டைத்தமிழர் இல்லறத்தின் இயல்பையும், நெஞ்சப் பாங்கையும் தெள்ளு தமிழில் அள்ளிக் கொழிக்கின்றன நம் பண்டைத் தமிழர் அகமகிழ்ந்தளித்த அகத்திணை, புறத்திணை இலக்கியங்கள். அன்று மக்கள் இல்லறத்தின் இயல்பையும், அதன் சிறப்பையும், உண்மையையுமறிந்து போற்றி இல்லற வாசிகளாய் நடந்து வாழ்ந்து வந்தபடியாற்றான் அவர்கள் இல்வாழ்க்கை வளமுடன் திகழ்ந்ததுமன்றி வெளியுலக வாழ்க்கையும் விழிப்புடையதாக இருந்தது. இன்றைய மக்கள் இல்லறமென்றாலென்ன?

(செல்வி த. மாலோகமணி)

அது போதிக்குந் தத்துவார்த்தமென்ன? என்பதே சரியாய் அறியாத நிலையில் வாழ்கின்றனர். என்னவோ முன்னோர் கட்டிவைத்த கட்டு; அதை வழிவழி பின்பற்ற வேண்டியதே முறை என்பதே இக்காலக் கருத்து. இத்தகைய பிற்போக்கான மாறுபாடான நெஞ்சங்கொண்ட இவர்களின் இல்லறம் நல்லறமாகச் சிறப்புடன் [illegible] தெங்ஙனம்? யாதொரு செயலுக்கும் அதன் உண்மையை யுணர்ந்து அதன் வழிச் செல்லாவிடில் ஒருபோது முண்மையான விமோசனங்கிட்டாது. இன்றைய மக்களின் உண்மையை நாடி உண்மை வழிச் செல்லாமையேஅவர்களின் அகவாழ்வன்றிப், புறவாழ்வும் நலிவதற்குக் காரணம் இல்லறமே. துறவறத்திலும் பார்க்க இம்மைப்பயனையன்றி மறுமைப் பயனையும் மாண்புடன் தருதற்கு உகந்தது. எச்சமயமும் எச்சாகியத்தினரும் இல்லறத்தை வெறுக்கவுமில்லை, ஒதுக்கவுமில்லை. இல்லறத்தை வாழ்வாங்கு வாழவேண்டுமென்பந்த ஒவ்வொரு சாதி சமயத்தாரின் இலட்சியமுமாகும். இவ்வறத்தின் உண்மையை உணர்ந்தே நம் ஔவை மூதாட்டியார் "இல்லறமல்லது நல்லறமன்று" என்று சிறப்புடனோதினர். அன்றியும் பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் "உலகைத் துறந்து துறவியாகக் காட்டிற்குச் செல் என்று நான் உனக்குப் போதிக்கவில்லை. இல்லறத்திலிருந்து கொண்டே நீ செய்யவேண்டிய காரியங்களைச் செய்" என்று அருச்சுனனுக்குக் கூறினர். இன்னோரன்ன மேற்கோள்களிலிருந்து இல்லறத்தின் இயல்பையும் உண்மையையும் சிறப்பையும் உணரலாம். சிந்தனையே மனிதனை மனிதனாக வாழச்செய்வது. சிந்தனையற்ற மக்கள் சிறந்தவர்களாக வாழமுடியாது. இல்வாழ்க்கையிலிருந்தே மேலான ஆன்மார்த்த அறங்களை மக்கட்கன்றி உலகிற்குஞ் செய்யமுடியும். சீரிய இல்லறம் வந்தமைவது கிட்டுதற்கரிய தேடுதற்கரிய பொக்கிஷமாகும். இல்லறத்திலிருந்து சரியான முறையில் வாழத் தெரியாது இன்று அனேகர் அல்லற்படுகின்றனர். சரியானமுறையில் இல்லறத்தை நிர்வகிக்கத் தெரிந்தவர்கள் ஆற்றல் நிறைந்தவர்கள். இல்லறத்தை நல்லறமாக மேலோங்கச்செய்வதற்குமுக்கிய பொறுப்பாளிகள் பெண்களே. பெண்களிலேதான் இல்லறத்தின் மேன்மைதங்கியுள்ளது. சரியான முறையில் இல்லறத்தை நிர்வகிக்கத் தெரியாத பெண்கள் பெண்களல்ல. அவர்கள் பெண் பதர்கள். அப்பெண்களால் இல்லறம் இழிவடையுமேயொழிய

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

ஏவிளம்பி ஞூ வைகாசி மீ
கக உ வெள்ளிக்கிழமை


## இரும்பினும் வலிதா இவர்கள் மனம்?

ஆற்றொழுக்குப்போன்ற அறிவுரைகள் செய்வதில் ஆற்றல்மிக்க நேருப் பெரியார் மூன்று நாட்களாக இந்நாட்டில் எடுத்தாண்ட பொருள்களை முதல் அமைச்சர் பண்டாரநாயகவும் மக்கள் ஐக்கியமுன்னணி அன்பர்களும் ஆய்ந்து ஊன்றி ஆலோசித்துப் பார்த்திருந்தார்களேயானால் இதுவரையில் அரசியல் நடைமுறையிற் பல மாற்றங்களைப் பொதுநலங்கருதி இயற்றுவதற்கு எண்ணங் கொண்டிருப்பார்கள். பாரதப் பிரதமரின் பல்வேறு சொற்பெருக்குகளிலும் அடிப்படையாகத் தோன்றியதொன்று. புத்தர்கள் பஞ்சசீலம் என்று எதைக் குறிக்கின்றார்களோ அதையே சைவஞானிகள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நன்னெறியாகத் திருவாய் மலர்ந்திருக்கின்றனர். அந்தஉள்ளச்செம்மை அரசியல் அமைச்சியல் குடியியல் என்பவற்றிலே இன்றியமையாது காணப்படுதல் வேண்டும் என்றும் அறிஞர் நேரு அழகாக ஆணித்தரமாக அமைவாக எடுத்துக்காட்டினர். பாரதத் தலைமை அமைச்சர் சீரிய சொல்லின் செல்வர் என்ற புகழ் மட்டும் அடைந்தவர் அல்லர். பொருட் பொலிவும் பொருத்தமும் விளங்கும் பேச்சாளர் என்ற பெருமையும் பெற்றவர். அன்னார் அநுராதபுரிப் புதுநகரில் விவேகானந்த வித்தியாலய நிறுவுகல் நாட்டியபொழுது, ஆட்சியாளர் கல்வியை நோக்கும் கண் அகன்றதாய் ஆதரவானதாய் அமைதல் வேண்டும் என்ற ஆழமான கருத்தை அறிவித்திருப்பதை மக்கள் ஐக்கிய முன்னணி அமைச்சர்கள் ஆராய்ந்து உணர்ந்துகொள்வார்களா? அதேசமையம் வரவேற்புரை பகர்ந்த வீரர் (Sir) கந்தையா வைத்தியநாதன் அவர்கள் முதல் அமைச்சர் பண்டாரநாயகவுக்கு சொல்லாமற்சொல்லிய புத்திமதிகளையும் ஆட்சியாளர் அவதானிப்பார்களா?

குடியரசு (சனநாயகம்) என்ற அரசியல் ஆட்சி முறைக்கு விளக்கங் கூறுமுகமாக நேருப் பெரியார் திறமையுடன் எடுத்தாண்ட கருத்தைத் திருக்குறளிலே,

'அறனிழுக்கா தல்லவை நீக்கி
[மறனிழுக்கா
மானமுடைய தரசு'

என்ற பொருள் பொருத்தமாகக் காட்டுகின்றது.

மக்கள் ஐக்கிய முன்னணி அமைச்சர்கள் புத்தகுரு போதித்த அறத்தின் வழுவாது ஆட்சி செய்கின்றார்களா? முறை செய்து காப்பாற்ற முடியாத முன்னணியார் பஞ்சசீலத்தைப் பன்முறை கிளிப்பிள்ளை போலத் சொல்லுவதால் பயனடைவார்களா?

# தமிழ்மறைக் கழக வருடாந்தக் கூட்டம்

## ஆற்றிய பணியின் அறிக்கை

--0--0--

தமிழ் பேசும் மக்களுடைய வீடுகள் ஒவ்வொன்றிலும் திருவள்ளுவருடைய திருநாளைக் கொண்டாடச் செய்ய எண்ணிச் சென்ற சில ஆண்டுகளாகப் பெருமுயற்சி செய்து வந்தோம். எங்கள் கருத்தைத் தமிழ் கூறு நல்லுலகம் முழுதும் பரப்பினோம். எங்கள் வேண்டுகோளை இந்தியா; இலங்கை, மலாயா, சிங்கப்பூர், பர்மா, தென் ஆபிரிக்கா, பீசித்தீவு முதலிய பல நாடுகளிலும் வாழுந் தமிழ் மக்களுக்கு விடுத்து ஆதரவு நாடினோம். இந் நாடுகளின் மக்களிற் பலர் எங்கள் வேண்டுகோளைப் பொருட்படுத்திப் போதிய ஆக்கமும் ஊக்கமும் நல்கி வருகின்றனர் இவ்வாறு கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடந்த தமிழ்மறைக் கழகத்தின் ஆண்டுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

"எங்கள் முயற்சி கைகூடுதற்கு ஆதரவு நல்கிய சங்கங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வாண்டிலும் திருவள்ளுவர் திருநாளன்று திருவள்ளுவர் நினைவுமலர் வெளியிடவும், 11-6-57 ல் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடவும் பல பத்திரிகைகளும் சங்கங்களும் முன்வந்துள.

திருவள்ளுவர் திருநாளைப் பொறுத்தவளவில் எம்முடன் ஒத்துழைக்காதுநின்ற பல கழகங்கள் எம்முடைய பணியின் தூய்மையான நோக்கத்தை உணர்ந்து நாம் குறிப்பிட்டுக் கொண்டாடும் நாளைக் கொண்டாட முன்வந்துள்ளன. இது அவற்றின் பெருந்தகைமையையே காட்டுகிறது. இவற்றுள் சென்னைத் தமிழ் ஆசிரியர் சங்கமும், 250 கிளைக் கழகங்களைக் கொண்ட தமிழ்நாடு திருக்குறள் மத்திய கழகமும் குறிப்பிடத்தக்கன.

இந்த ஆண்டும் முந்திய ஆண்டுகளைப் போல 11—6—57 ல் சிங்கப்பூர், சென்னை, திருச்சி, கொழும்பு வானொலி நிலையங்கள் திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டுச் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதற்கிசைந்துள்ளன. எமது வேண்டுகோளின்படி திருவள்ளுவர் திருநாளை அரசினர் விடுமுறை நாளாக்குவதற்கு முயல்வதாகச் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் எமக்கு அறிவித்துள்ளது. தமிழினத்தின் ஒற்றுமைக்கும் உயர்வுக்குமாக திருவள்ளுவர் திருநாளை ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடுமாறும் இத்திருநாளைத் தமிழினத்தின் திருநாளாக நிலைக்கச் செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறோம்" என்று அவர் மேலும் பேசும்போது குறிப்பிட்டார்.

கழகச் செயலாளர் திரு. இ. சி. சோதிநாதன் அவர்கள் ஆண்டறிக்கையினை வாசித்தார். சென்ற ஆண்டிற்போலவே இந்தஆண்டிலும் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் எமது கழகம் நடத்திய தமிழ்மறைத் தேர்வுக்குத் தோற்றமுன் வந்தார்கள். இத் தேர்வைத் தொடர்ந்து வருகிற ஆண்டுகளிலும் நடத்துவதென முடிவு செய்திருக்கிறோம். எமது கழகம் நடத்திய அகில உலகத் தமிழ் மறைக் கட்டுரைப் போட்டிக்குப் பல நாடுகளிலுமிருந்து 159 பேர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். இவர்களுடைய கட்டுரைகளிற் சிறந்தனவற்றை விரைவில் நூலாக வெளியிடுவோம்.

சமூகத்தொண்டு செய்தற்கு ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காகத் "தமிழ்மறைத் தொண்டர்முன்னணி ஒன்றையும் நிறுவியுள்ளோம். இளைஞர்கள் பலர் இதிற் சேர்ந்துளர். 1330 தொண்டர்களை இவ்வாண்டிலே சேர்க்கத் திட்டம் இட்டுள்ளோம்" என்று செயலாளர் தம் அறிக்கையிற் குறிப்பிட்டார்.

திரு க. ச. அருணந்தி அவர்களும் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களும் கழகத்தின் காப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின் அடுத்த ஆண்டுக்குரிய அலுவலாளர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: பண்டிதர் கா. பொ. இரத்தினம், செயலாளர்: இ. சி. சோதிநாதன், பொருளாளர்: வ. நடராசா துணைச்செயலாளர்: சி. இராமலிங்கம், ஆட்சிமன்ற உறுப்பினர்: திருவாட்டிகள்: இந்திரா மகாதேவா, புவனேஸ்வரி சச்சிதானந்தம், மகேசுவரி பாலகிருஷ்ணன், பண்டிதை அப்பாக்குட்டி தங்கம்மா, திருவாளர்கள்: இ. இரத்தினம், மு. கணபதிப்பிள்ளை, என். எம். கமால்தீன், எஸ். டி. சிவநாயகம் ஆ. க. சுப்பிரமணியம், கு. வி. செல்லத்துரை, நா. ப. பாலசந்திரன், பண்டிதர் க. முருகேசு, பண்டிதர் க. வீரகத்தி, வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம் செ. வேலாயுத பிள்ளை பண்டிதர் த. பொ. கார்த்திகேசு.

# பரமேஸ்வரா இலக்ஷ்ய ஜயந்தி

நிகழும் வைகாசி மீ (மே) 24, 25, 26 ஆம் நாட்களில் பரமேஸ்வரக் கல்லூரியின் இலக்ஷ்ய ஜயந்தி விழா, கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சமயம் — இலக்கியம் — பண்பாடு முதலியனபற்றி அறிஞர் பலர் ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள்.

காலை 9 மணிக்குத் தலைவர்களும், அறிஞர்களும் கல்லூரி முதற்பெருந் தோரண வாயிலிலிருந்து தேவாரபாராயணத்துடன் சகல வரிசைகளோடும், பரமேஸ்வர ஆலயத்திற்கும், அங்கிருந்து கல்லூரி மண்டபத்திற்கும் அழைத்துச் செல்லப் பெறுவர்.

அதர்வ வேதத்திலுள்ள 'பிரசினோபநிடத' மந்திரங்களுடனும், தேவாரத்திலுள்ள 'நமச்சிவாய'த் திருப்பதிகங்களுடனும் ஜயந்தி விழா ஆரம்பிக்கப் பெறும்.

இவ் விழாவில் திரு. சு நடேசபிள்ளை அவர்கள், திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள், திரு ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், பிரமஸ்ரீ ந. வீரமணி ஐயர், சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் ஸ்ரீமத் ஆனந்தா மைத்ரேய தேரர் திரு. வ. பொன்னையா அவர்கள் திரு. கே. எஸ். அருள்நந்தி அவர்கள் ஆகியோர் சொற்பொழிவுகள் ஆற்றியும் பிறவாறும் பங்குபற்றுவார்கள். திரு. என். சண்முகரத்தினம் அவர்கள் இன்னிசை விருந்தளிப்பார்கள்.

# சைவப் பிரசங்கம்

அராலி தெற்கு ஆறுமுக நாவலரின் திருத்தொண்டு சேவா நிலைய ஆதரவில் நிகழும் ஏவிளம்பி வருடம் சித்திரை மீ 21-ந் திகதி (3—5—1957) வெள்ளிக்கிழமை இரவு அராலி தெற்கு ஆகாயக்குளப் பிள்ளையார் கோயிலில கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியை ஸ்ரீமதி ச. அமிர்தாம்பிகை B A. (Hons) அவர்களால் சைவ சமயத்தின் தற்கால நிலையும் பெற்றோர் கடமையும் என்னும் பொருள்பற்றி ஓர் சிறந்தசொற்பொழிவாற்றப்பெற்றது.

சைவசமயம் வரவர ஆதரவும் அனுட்டிப்பும், பரிபாலனமுமற்று வருகின்றது. அந்நிலைமைக்குப் பல காரணங்களுள் சைவசமய சாத்திரம் படிப்பிக்கப்படாதிருத்தல் சைவசமய அறிவு இல்லாதவர்களுக்குத் துர்ப் போதனைகள்செய்தல் முன் வழக்கமில்லாத முறையிற் சுவாமிக்குப் பூசை தமிழிற் செய்ய வேண்டுமென்ற துவேஷப் போதனை செய்தல் என்பன அவற்றுட் சில என்று அவர் பேசும் போது குறிப்பிட்டார்.

திரு. கந்தையா அவர்கள் இவ்வூர்ப் பிள்ளைகளுக்குச் சைவசமய சாத்திரமாகிய சிவஞான சித்தியாரிலுள்ள திருவிருத்தங்களை மனப் பாடமாக்கச் செய்வது மிகவும் போற்றத்தக்கது. அவற்றைப் படிப்பிப்பதில் பெற்றோர் ஊக்கங் காட்டுதல் வேண்டும் என்று மேலும் பேசும்போது கூறினர்.

மேற்படி கோயில் எசமான் திரு. அ. வ. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்புரை கூறும்போது சமய குரவர்கள் சந்தான குரவர்கள முதலிய முன்னோரின் முறைகளுக்கு மாறானவைகளை நாங்கள் செய்யக் கூடாதென்று கூறினர்.

---

## குமரகுருபர சுவாமிகள் குருபூசை

—:—

16-4-57 வியாழக்கிழமை இரவு யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை யாதரவில் ஷை சபை நாவலர் மண்டபத்தில் குமரகுருபர சுவாமிகள் குருபூசை நடத்தப் பட்டது. இரவு 7 மணியளவில் கடவுளாராதனை நிகழ்ந்த பின் சைவப் பிரசாரகர் திரு. பொ. அப்புக்குட்டி அவர்கள் 'குமரகுருபர சுவாமிகள்' என்னும் பொருள்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினர்கள். அவர் சுவாமிகளுடைய பிறப்பு முருகப்பெருமான் அநுக்கிரகம், உபதேசம், தொண்டு, பக்தி, அவருடைய தமிழ்மொழிப் பற்று முதலியவைபற்றிவிரிவான சொற்பொழிவாற்றினூர். இவர் தமிழ்நாட்டில் மாத்திரமல்ல தமிழ்மொழி வழங்காத உத்தரதேசத்திற்கும் சென்று சைவத் தொண்டு புரிந்ததை மிகவும் விதந்து பிரசாரகர் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதநேரு அவர்கள் வருகை

—:0:—

## ஆர்வம் பெருகும் வரவேற்பு நிகழ்ச்சிகள்

—0—

### கருத்துக்கள் பல பரிமாறிக் கூட்டுறவு வலியுறுத்தப்பெற்றது

—0—0—

வந்திறங்கினர் பண்டிதநேரு அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் இரத்மலானை விமான நிலையத்தில். சனசமுத்திர மொன்று ஆர்வத்துடன் அவரை வரவேற்றது. பல்லாயிரக் கணக்கான இலங்கை இந்திய மக்கள் ஒன்றுகூடி வரவேற்புக்குப் பெருஞ் சிறப்பைக் கொடுத்தனர். புன்னகை பொலிந்த முகத்துடன் காட்சியளித்தார் நேரு அவர்கள். முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக நேரு அவர்களை முதன்முதலாக வரவேற்று ஏனையோருக்கு அறிமுகப்படுத்தினர்.

கொழும்பிலிருந்து அனுராதபுரத்துக்கு அவர் பிரயாணம் செய்தற்குச் சிறந்த ஒழுங்குகள் செய்யப் பெற்றிருந்தன. புகையிரதப்பகுதி அதிபரும், மந்திரியும் அவற்றைமேற்பார்வை செய்தனர். நேரு அவர்கள் வரவை அறிந்து மக்கள் பெருந்தொகையாகத் திரண்டனர். புகையிரதம் ஓடத் தொடங்கிய பொழுது மக்களும் ஓடினர்களென்றால் அவர்களின் ஆர்வத்தைப்பற்றிச்சொல்லவேண்டியதில்லை.

### இரகசியப் பேச்சு

கொழும்பிலிருந்து அனுராதபுரத்துக்குப் போகும்போது இரு முதல்மந்திரிகளும் இரகசியமாகவே பேசினர்கள். என்ன பேசினர்களென்று யாரும் அறிய முடியவில்லை.

### அனுராதபுரத்தில் வரவேற்பு

இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்த முதல் மந்திரிகளை ஏற்றிச் சென்ற புகையிரதம் அனுராதபுரத்தை அடைந்ததும் "சாது சாது' என்னும் ஒலியைப் பெருக்கிப் பௌத்த மக்கள் நேரு அவர்களை ஆரவாரத்துடன் வரவேற்றனர். நகரம் எங்கும் மிகச் சிறப்பாக அலங்கரிக்கப்பெற்றிருந்தது. இந்திய மூவர்ணக் கொடிகளும் இடம்பெற்றிருந்தன.

### சகிப்புத்தன்மைச் சாதனை

பண்டிதநேரு அவர்கள் புதிய அனுராதபுர நகரைத் திறந்து வைத்துப் பேசும்போது இலங்கை இந்தியத் தொடர்பை விளக்கி சகிப்புத் தன்மையை யாவரும் வளர்க்க வேண்டுமென்று வலியுறுத்தினர்.

இன்றையஉலகில் பலாத்காரச் செயல்கள் பெருகுகின்றன. இந்நிலைமையைச் சமாளிப்பது எப்படி? புத்தபிரானின் போதனையாகிய சகிப்புத் தன்மை, அன்பு ஆதியவற்றை எவ்வாறு பயன்படுத்துவது? இக் கேள்விகளுக்குத் தகுந்த மறுமொழி கொடுக்கவேண்டியவர்களாய் நாங்களிருக்கின்றோம். புத்தபிரானது மகத்தானசெய்தியை நான் பார்க்கும்பொழுது அவருடைய உபதேசம் எங்களுடைய சொந்த வாழ்க்கைக்கு மாத்திரமல்லாமல் எங்களுடைய தேசக் கருமங்களிலும், சர்வதேசக் கருமங்களிலும் எவ்வாறு ஒளி தரும் என்று சிந்திக்கின்றேன். தான் பிறந்தநாட்டிலிருந்து இங்குவந்த புத்தபிரானது மகத்தான உபதேசம் இருநாடுகளுக்குமிடையில் மிகப் பலமான தொடர்பை ஏற்படுத்தியுள்ளது. எங்கள் இரு நாடுகளையும் பூகோளசரித்திரமே இணைத்து வைத்திருக்கின்றது என்று அவர் பேசும்போது கூறினர்.

ஸ்ரீ பண்டாரநாயக பேசும்போது சகிப்புத்தன்மையை வளர்த்தால் எவ்வித பிணக்கையும் நாம் நன்கு தீர்த்துக் கொள்ளலாம் என்று கூறினர்.

### விவேகானந்த வித்தியாலய அத்திபாரமிடுதல்

அனுராதபுரத்தில் அமைககப்படும் விவேகானந்த வித்தியாலயத்துக்கு அத்திபாரமிடுதல் இந்துக்களின் சார்பில் நேரு அவர்களாற் செய்யப்பெற்றது.

அத்திபாரத்தை இடும்படி அவரைக் கேட்டுப் பேசும்போது, எத்தகைய அரசியற் கட்சித் தொடர்புமில்லாது இந்நாட்டில் இந்து சமயக் கல்வியைப் பாதுகாத்து இந்துமதத்தை வளர்க்கும்பொருட்டுப் பல சங்கங்கள் ஒன்றுகூடி இந்து மாமன்றத்தை உருவாக்கியுள்ளன. பாரத வீரர்களுள் ஒருவரான சுவாமி விவேகானந்தா அவர்களின் பரந்த நோக்கத்தையும் இலட்சியங்களையும்நிலைநாட்டும் பொருட்டு இந்த இந்துச் சங்கம் இந்நகரில் நிலவும் விவேகானந்த வித்தியாலயத்துக்கு அத்திபாரமிடும்படி வேண்டுகிறேன் என்று ஸ்ரீ சே. கந்தையா வைத்தியநாதன் அவர்கள் கூறினர்.

### அன்புநெறி உபதேசம்

வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தில் நடந்த புத்த ஜயந்தி விழாவுக்கு பண்டிதநேரு அவர்கள் அழைக்கப்பெற்றூர். அத்தருணம் அவர் பேசும்போது இன்றைய உலகில் சந்தேகமே எங்கும் தாண்டவமாடுகின்றது; இதனல் பலாத்காரம் உண்டாகின்றது; பலாத்காரத்தால் வரக்கூடிய நன்மை எதுவுமில்லை. பலாத்காரம் வேண்டாம் என்று நாங்கள் கேட்கின்றோம்; ஆனல் அதைக் கேட்கின்றூர்களில்லை. நான் அன்பு வழியை விரும்புபவன்; அதிலிருந்து என்னை நீக்க முடியாது; மக்களுக்குச் சேவை செய்வதே எனது இலட்சியம்; அதை நிறைவேற்றியே தீருவேன்; இன்று உலகில் மூன்று பிரச்சினைகளிருக்கின்றன. அவை மக்களுக்கிடையே சண்டை, மக்களுக்கும் ஓர் தொகுதிக்குமிடையே போர், இரு தொகுதிகட்கிடையே போர் என்பனவாகும். இவை எல்லாம் பலாத்காரமே. இவற்றை ஒழிக்க நாம் முயல வேண்டும் என்று அவர் கூறினர்.

### பிரியாவிடை

எனது மூன்று நாள் இலங்கை வாசத்தில் நிறைந்த செயலாற்றப் பெற்றது மாத்திரமல்ல நல்லுணர்ச்சிகளும் நிறைந்திருந்தன. அவற்றால் நான் நின்ற காலம் நீண்டது போலத் தோன்றிற்று. எம்மிலுண்டான நல்லுணர்ச்சிகளால் நன்மையுண்டாகுமென்று நம்புகின்றேன் என்று தமது பிரியாவிடைப் பேச்சில் பண்டிதநேரு அவர்கள் கூறினர்.

### காஷ்மீர் பற்றித் திடமான கருத்து

காஷ்மீரின் ஓர் பகுதியைப் பாக்கிஸ்தான் கைப்பற்றியுள்ளது. அப்பகுதியைவிட்டுப் பாக்கிஸ்தான் வெளியேறும் வரையில் எந்தவிதமான உடன்பாட்டுக்கும் இடமில்லை. இந்தியாவுடன் காஷ்மீர் சட்டப்படி இணைந்தது. ஆனல் பலாத்காரத்தால் அதன் ஒரு பகுதியைப் பாக்கிஸ்தான் பிடித்துள்ளது என்று கொழும்பில்பத்திரிகை நிருபர்களின் மகாநாடு ஒன்றில் பண்டிதநேரு கூறினர்.

அணுக்குண்டுப் பரீட்சைகள் உலக மக்களுக்குப் பெரும் ஆபத்தான நிலைமையை உண்டாக்குவதனல் அவற்றைக் கைவிடுதல் வேண்டும் என்று உலக வல்லரசுகளுக்கு ஓர் வேண்டுகோளை இலங்கை இந்திய முதல் மந்திரிகள் வெளியிட்டிருக்கின்றனர்.

---

# மாணக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

## பெரியபுராண வசனம்

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் புராணம் II

சென்றபாடத்தில் எந்த நாயனருடைய சரித்திரம் படித்தோம்? திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணம். என்னென்ன விஷயங்களைப்பற்றிப்படித்தோம்? நீர் சொல்லும்? தந்தையார் நீராடப் போகும் பொழுது மைந்தன் பின் தொடர்ந்து சென்றமை. உமாதேவியார் ஊட்டிய பாலையுண்டு தேவாரம் பாடியமை. என்ன தேவாரம் அவர் முதலிற் பாடினர்? "தோடுடைய செவியன்" என்பது. அத்தேவாரம் தெரிந்தவர்கள்? எங்கே பாடும்?

"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென் னுள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந் தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே"

இதுதான் அவர் முதலிற் பாடிய தேவாரம். மூன்று வயதிலேபாடினவர். அதன் பின்? ஐந்தெழுத்துப் பொற்றாளம் பெற்று; அதென்ன ஐந்தெழுத்துப் பொற்றாளம்? ஐந்தெழுத்து "நமசிவய" என்னும் பஞ்சாக்கரம். பஞ்சாக்கரம்—ஐந்தெழுத்து. ஐந்தெழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பொற்றாளம் பெற்று ஏழிசையுந் தேங்கத் தலங்கள் தோறுஞ் சென்று பதிகங்கள் அருளியமை. அப்பதிகங்களைத் திருநீலகண்டப் பெரும்பாணர் இசையிலமைத்துப் பாடிக் காட்டினமை, திருவரத்துறையிற் சனுற் சின்னங்களும் சிவிகையும் கிடைக்கப் பெற்றமை. தாயார் விபூதி தரித்துக் காவல் செய்தமை. முதலான விஷயங்களைப் பற்றிப் படித்தோம். சரி; இங்ஙனமாக; ஒருநாள்.

### கோயிலில் முயலகன் நோயைக் கொல்லுதல்

சம்பந்தர் தமிழ் நாட்டுத் தலங்களைத் தரிசனை செய்ய விரும்பினர். தமது விருப்பத்தைத் தந்தையாரிடம் கூறினர். தனியே அனுப்ப விரும்பாத தந்தையும் உடன் சென்றூர். பலதலங்களைக் கண்டு திருப்பாலாச்சிரமம் என்னுமிடத்தை யடைந்தனர்.

அங்கு கொல்லிமழவன் என்று ஒருவன். அவனுக்கு ஒரு புத்திரி. அவள் முயலகன் என்னும் ஒரு நோயினல் வருந்தினள். கவலை கொண்ட மழவன் அவளைக் கோயிலிற் கொண்டு போய்விட்டான். நாயனர் வருகையை அறிந்து ஓடினன் தேடி. அடியற்ற மரம்போல முன்னலே விழுந்தான். பிள்ளையார் எழுப்பக் கூடிக்கொண்டு கோயிலுக்குச் சென்றூன். மயங்கிக் கிடந்த கன்னியைக் கண்டு "இஃதென்னை" என்றூர். விஷயத்தை விளக்கி விண்ணப்பஞ் செய்தான் மழவன். "துணிவளர் திங்கள்" என்றெடுத்து "மணிவளர் கண்டரோ மங்கையைவாட மயல் செய்வதோ விவர் மாண்பே" எனப் பதிகம் பாடினர். கன்னி எழும்பினள் நோய் நீங்கி. தந்தையும் மகளுஞ் சந்தோஷங் கொண்டு பிள்ளையை—சம்பந்தரை வணங்கினர்.

### அவ்வினைக் கிவ்வினைப் பதிகமருளுதல்

சில நாட்களிற் திருக்கொடிமாடச் செங்குன்றூருக்குச் சென்றூர். அங்கு அப்பொழுது பனிக்காலம். கொடுங் குளிர். பரிசனங்கள் இதனைச் சம்பந்தருக்குச் சொன்னர்கள். பிள்ளையார் "அவ்வினைக்கிவ்வினை" என்று ஒரு பதிகமருளிப் பனிக் கொடுமையை யகற்றினர். அன்று தொட்டுப் பனிப்பிணி அக்காலத்தில் அங்கு இல்லை.

### பட்டீசர் முத்துப்பந்தர் அருளினர்

சோழமண்டலத் தலங்களையும் பிறவற்றையும் வணங்கிக் கொண்டு திருப்பட்டீச்சரம் என்னுந் தலத்திற்கு வழிக்கொண்டார். வழியில் வெய்யிற்சூடு அதிகம்; அப்பொழுது ஒரு பூதம் முத்துப் பந்தருடன் தோன்றிப் "பட்டீசர் எம்மை விடுத்தருளினர்" எனச் சொல்லிற்று. திருவருளை வணங்கி – முத்துப்பந்தரின் கீழ் – முத்துப் பிள்ளையார் பட்டீச்சரஞ் சென்று வணங்கித் திருவாவடுதுறையை அடைந்தார்.

### தந்தைக்குப் பொன்னுலவாக்கிழி தருதல்

அங்கு இருக்கும் நாளில் – தந்தையார் ஒரு யாகஞ் செய்கிறவர். அந்த யாகஞ் செய்யுங் காலஞ் சமீபித்தது. "யாகஞ் செய்யப் பொருள் வேண்டும்" என்றூர் தந்தையார். "இடரினும் தளரினும்" என்னும் பதிகம்பாடி–ஆயிரம்பொன்னிறைந்த முடிப்பு – அது பொன்னுலவாக்கிழிபொன் மாற்றுக்குறையாத –எடுக்க எடுக்கக் குறையாத பொன் முடிச்சு. ஒன்றைப் பெற்றுத் தந்தையாரிடங் கொடுத்துச் சீர்காழிக்கு அனுப்பிவிட்டுத் – தலம்பலகண்டு — கண்டு என்றால் தரிசித்து தரிசித்துக் கொண்டு தருமபுரஞ் சேர்ந்தார்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணுக்கர் மதி வள மன்றம்

3-ம்பக்கத் தொடர்ச்சி

**திருவருட் பெருமை யிக்**

**கருவியி லமையுமோ?**

தருமபுரம்; பாணருடைய - திருநீலகண்டப் பெரும் பாணருடைய தாயார் பிறந்த இடம். ஆதலின் அங்குள்ளாரும் எதிர்கொண்டு வணங்கினுர்கள். பிள்ளையார் அவர்களுக்குப் பாணர் மகிமையைச் சொன்னுர். "உலகெலாம் இசை விளங்குக" என்றனர் அவர்கள். பாணர் மனம் பதைத்துச் "சுவாமீ, பதிகவிசை அளவு கடந்தது; யாழில் அது அடங்காது என்பதைக் காட்டுவேன்; ஒரு பதிக மருளுக" என்ருர். நாயனுர் "மாதர் மடப்பிடி"ப் பதிகம் பாடினுர். இசையைப் பண்ணில் இசைக்கப் பார்த்தார் பாணர். முடியவில்லை. "சுவாமீ! இசையை யாழில் ஏற்பேனென்று சொல்லப் பண்ணியது இந்தயாழன்ரே" என்று அதனை உடைக்க ஓங்கினுர். நாயனுர் தடுத்து அதனை வாங்கி "அம்மையப்பன் திருவருட் பெருமை - மனசினுலும் அளவுபடாத இசைப் பெருமை இந்தச் சிறிய கருவியில் அமையுமோ? இயன்றவரை முயற்சியும்" என்று யாழைக் கொடுத்தார்.

**திருமருக லில்வதியுங்**

**கருணைநிறை பரமசிவம்**

பின்னர் திருநள்ளாறு, திருச்சாத்த மங்கை, அயவந்தி என்னுந் தலங்களைக் கண்டு - திருச்செங்காட்டங்குடிக்குச் சென்ருர். அங்கு சிறுத்தொண்டர் என்று ஒரு நாயனுர். அவர் அடியார்களின் முன்னிலையில் தாம் மிகவுஞ் சிறியவராக ஒழுகி வந்தமையால் அப்பெயர் பெற்ருர். அவருடன் கலந்துபேசி அங்குள்ள கணபதீச்சரத்தைப் பாடிக்கொண்டு திருமருகலுக்கு வந்தணைந்தார். அங்கு ஒரு அறபுதம் நடந்தது. ஒருநாள் இரவு. அங்குள்ள திருமடத்தில் வணிகனெருவன் பாம்பு தீண்டி இறந்து போனுன். அவனேடு கூடி வந்தவள் ஒரு கன்னி. அவள் குழறினுள் 'நஞ்சை யமுதாகிய நாதா! இரதிக் கருள்புரிந்த கருணுநிதியே! மார்க்கண்டர்க்காய் யமனை யுதைத்த பாதா! வேதா! திருமருகற் பரமா!" என்று. காலைத் தரிசனத்திற்கு வந்தவர் நாயனுர். கேள்விப்பட்டார் கன்னியைக் கண்டு கேட்டார்; என்ன நடந்ததென்று. கன்னி சொன்னுள். அவள் சொன்னதைச் சொல்லுகிறேன். "எனக்கு ஊர் வைப்பூர். தகப்பனுர் பெயர் தாமன். என்னைவிடச் சகோதரிகள் அறுவர். அவர்களை மருமகனுகிய இவனுக்கு விவாகஞ் செய்வதாகச் சொன்னவர். சொல்லிச் சொல்லிப் பண வாஞ்சையாற் பிறருக்கு மணஞ் செய்து கொடுத்துவிட்டார். இது எனக்குப்பொறுக்கவில்லை.

நான் இவனுக்கு மனைவியாக விரும்பினேன். பெற்ரேருக்குத் தெரியாமல் இவருடன் இருந்தேன். இவ்வளவுதான். கப்பல் கவிழ்ந்தது போலாயிற்று இப்பொழுதுஎன்னிலைமை; தேவரீர் அருள் புரிதல் வேண்டும்" என்ருள். அவள் முறைப்பாட்டைக் கேட்ட பிள்ளையார். "சடையா யெனுமால்" என்னும் பதிகம் பாடி அவனை எழுப்பினுர். சொல்லவா வேண்டும் அவளுக்குப் பெரிய ஆனந்தம்! இருவரும் நாயனுரை வணங்கினர். நாயனுர் இருவரையும் தம்பதிகளாக்கினுர்.

... ... ... ... .... .... (வளரும்)

# புறநானூற்றில் நட்புச்சிறப்பு

## பாரி பிரிவுபற்றிக் கபிலர் காட்டிய துன்பம்

பாரி பறம்புநாட்டுச் சிற்றரசன். கொடையிற் சிறந்தவன். "கொடுக்கிலாதானைப் பாரியேயென்று கூறினும் கொடுப்பாரில்லை" என சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தமது தேவாரத்தில் எடுத்தோதியிருக்கின்ருர். இச்சிறந்த கொடையாளியாகிய பாரி என்னும் காவலனுக்கு கபிலர் என்னும் பாவலர் நட்புப் பூண்டார். பிறரை வாழச் செய்வது நல்வினை. தாழச்செய்வது தீவினை. யாரும் ஒருகால் மரணம் என்னும் சமுத்திரத்தில் ஆழவேண்டி வரும். அப்பொழுது "வாழச் செய்த நல்வினையல்லது, ஆழுங்காலப் புணை பிறிதில்லை" என்ற நல்வாக்கியத்தைப் பாரி உணர்ந்தவன். பாரியின் பண்புமிக்க தண்மையினுல் அவன் புகழ் எங்கும் பரந்தது. கபிலரும் அவனது புகழைச் செல்லுமிடந்தோறும் பரப்பிவந்தார். சோழநாட்டுத் தலைவன் ஒருவ

ஸ்ரீ வ. குகசர்மா

னின் பெண் மணப்பருவமடைகிருள். அவளின் செவ்வியை வியந்து பாடும்போது "பாரி பறம்பிற் பனிச்சுனைபோல காண்டற்கரியாளாகி" எனக் கபிலர் பாரியின் நாட்டை விதந்து பாடுகிருர். பாரியின் பெருமை கண்டு பொருமை கொண்ட மூவேந்தரும் போர்க்கோலங் கொண்டனர். கபிலர் பாரியின் தன்மையை எடுத்துரைத்து, போர் வேண்டாம் எனக் கூறினர். மூவேந்தர் சம்மதித்திலர். போர் மூண்டது, பாரி இறந்தான் இப்போது

தான் கபிலரின் பெருந்தன்மை பிரகாசிக்கிறது. "அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல் உற்றுளித் தீர்வார் உறவல்லர்" என்பது நீதிவாக்கியம். கபிலர் தனக்குக் கொடுப்பார் இல்லை என்பதை அறிந்தவுடன் அவ்விடம்விட்டு நீங்கவில்லை. பாரிக்கு இரு பெண் மக்கள் இருந்தனர். அவர்களைத் தம் பொறுப்பில் ஏற்று அவர்களுடன் அந்நாட்டை விட்டுப் புறப்பட்டார். அன்று பூரணை வெண் நிலவு எங்கும் அமிர்தத்தைப் பொழிந்து கொண்டிருந்தது பாரியின் மக்கள் எவ்வாறு மகிழ்ச்சியுடன் இருக்கமுடியும்.

"அற்றைத் திங்கள்
அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையேம்
எங்குன்றும்
பிறர்கொள்ளார்
இற்றைத் திங்கள்
இவ்வெண்நிலவில்
வென்று எறி முரசின்
வேந்தர் எம்குன்றும்
கொண்டார் யாம் எந்தை
யும் இலமே"

என்று புலம்பினர்.

கபிலர் அவர்களைத் தேற்றி அழைத்துச் சென்ருர். அவர்கள் மணப் பருவம் எய்தியிருந்தமையால் பதினெண்குடி வேளிருள் ஒருவனுகிய இருங்கோவேள் என்ற அரசனிடம் அழைத்துச் சென்று

"ஊருட னிரவலர்க்
கருளித் தேருடன்
முல்லைக் கீத்த
செல்லா நல்லிசைப்
படுமணி யானைப்
பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரிமகளீர் ...';

என்று பாரியின் பெருமை தோன்ற அறிமுகப்படுத்தி அப்பெண்களை மணந்து கொள்ளும்படி வேண்டுகிருர். ஆனுல் அந்த வேண்டுகோளை இருங்கோவேள் மறுத்துவிட்டான். கபிலர் கோபங்கொண்டு "புலவரின் பகையைப் பெற்றமையால் அரையமென்னும் மூதூர் அழிந்து போயிற்று நீ என்னை இகழ்ந்தாய் என் குற்றத்தைப் பொறுத்து நன்ருக வாழ்வாயாக" என்று கூறி அவ்விடம் விட்டகன்ருர்.

(தொடர்ச்சி6 -ம் பக்கம்)

### பொருளற்ற பேச்சு

—0—

இலங்கையை இந்தியா பலாத்காரமாய்ப் பிடித்து விடுமென்று இலங்கை மக்களுட் சிலர் நினைத்துப் பேசுவது பொருளற்ற பேச்சாகும்; இந்தியா முழுதுக்கும் மூளைப்பிசகு வந்தால் மாத்திரமே அப்படி நினைப்பதிற் பொருளுண்டு. அப்படி ஒருவிஷயததைக் குறிப்பிடுவதே விரும்பத்தகாகதொன்ருகும். ஆனுல் இலங்கை மக்கள் மனத்தில் உண்டான பிழையான எண்ணத்தை நீக்குதற்கு அதைக் குறிப்பிட வேண்டியதாயிற்று என்று பண்டிதநேரு அவர்கள் கொழும்பிலே பேசும்போது குறிப்பிட்டார்.

# திருக்கேதீச்சரத்துக்குப் பாத யாத்திரை

## இரண்டாம்முறைமேற்கொள்ளுதற்கு அன்பர்களுக்கு அழைப்பு

ஆதியிலே தட்சிண கைலாசத்திலிருந்து பல இருஷிகள் யாத்திரை காரணமாக ஈழநாடு போந்தனர். அங்ஙனம் வந்த கூட்டத்தினருள் சிலர்; பிருகு முனிவர், பருப்பத முனிவர், மாரியவான் சிற்பவானந்த முனிவர், சப்த இருடிகள்முதலானோராவர். இவர்கள் கதிர்காம யாத்திரை காரணமாக யாழ்ப்

..................... ... ......... .......

ஸ்ரீ செ. கோவிந்தசாமிஅவர்கள்

................................. ... ...

பாணம் வடபாகக் கடற்கரைவழியாய் யாத்திரை செய்யத் தொடங்கினர். யாத்திரை செய்யும் இடங்களில் தங்குமிடந்தோறும் தோவாலயங்களை உண்டு பண்ணிச் சென்றனரென்ப. அங்ஙனம் சென்ரோர்களுள் பிருகு முனிவர் கூட்டத்தார் திருக்கேதீச்சரம் சென்று, மகா பாலாவித் தீர்த்தமெய்தி, கௌரி சமேத கேதீச்சர நாதர் திருவடிகளைச் சிந்தித்து மகா சமாதி யெய்தினரெனச் சதகநூல் கூறுகின்றது. சித்பவாநந்த முனிவரும் தாம் செல்லுமிடந்தோறும் விநாயகருக்குக் கல்லு வைத்துப் பூசித்தாரென்பர். சப்த இருடிகள் அடங்கிய இடங்கள் இலங்கையின் வடகிழக்கு மாகாணக் கடற் கரையில் கோயில் கொண்ட முருகஸ்தலங்கள் என்றும் ஆய்ந்தமைந்த அறிஞர் கூறிப் போந்தனர்.

இவ்வித பெருமை மிக்க இருஷிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலசற்குருநாத சுவாமிகளும் அவர் உடன் பிறப்பாளரான தமயனுர் ஸ்ரீமத் பரமாநந்தப் புலவரும் கதிர்காமயாத்திரை காரணமாகப் [illegible] வெளிக்கூடாகப் [illegible] டனர். பின் பல்லவராயன் கட்டையடைந்து முனங்காவில் சித்பவாநந்த விநாயகருக்குக் கீர்த்தனைகள், கும்மிப் பாட்டுகள் பாடிச் சென்று, தங்கள் நோய் தீரப்பெற்று, திருக்கேதீச்சர தலம் இருக்கும் இடத்தை அறிந்தார்கள். அங்கு "ஒரு தேன் பொந்திருக்கின்றது. ஒரு திரவியமிருக்கின்றது. ஒரு மருந்து இருக்கின்றது" என நாவலர் அவர்கள் வாழ்த்திக் கேதீச்சர நாதர் திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டு கதிர்காமம் சென்றனரெனவும் பெரியோர்கள் கூறிப்போந்தனர்.

ஆகவே இவ் வடியார்களின் பாதச் சுவட்டைப் பின்பற்றி இப்பாத யாத்திரை வருடந் தோறும் சைவமக்கள் செய்ய வேண்டுமென இன்றைய சைவப் பெரியோர் அவாக்கொண்டுள்ளார்கள். ஆதிசங்கராச்சாரிய சுவாமிகளின் அடிச்சுவடுபற்றி இன்று நம் பாரத தேசத்தில் காஞ்சி பீடாதிபதி ஆசாரிய சுவாமிகள் வினேபாஜி போன்ற பெரியார்கள் நடந்து யாத்திரை செய்வது போன்று வட இலங்கைச் சைவப் பெரியோரும் அவர்களைச் சார்ந்த தொண்டர்களும் பலர் முன்வருதல் போற்றுதற்குரியதாகும். ஸ்ரீலஸ்ரீ சிவஞான சுவாமிகள் ஸ்ரீமத் குமரகுருபர சுவாமிகள் தமிழ்நாடெங்கணும் சென்றுலாவிச் சைவத் தமிழ் முழக்கம் செய்தார்கள். சுவாமி விவேகானந்தர் கிராமம் கிராமமாகத் திரிந்து அஞ்சாநெஞ்சுடன் இந்துமத முழக்கம் செய்தார். ஸ்ரீ. கதிரைவேற்பிள்ளை, சிவஸ்ரீ. செந்திநாதையர். ஸ்ரீ. அம்பலவாணநாவலர், ஸ்ரீ. சுவாமிநாத பண்டிதர் முதலானோர் [illegible] நாவலர் வளர்த்த சைவத் தமிழுக்குத் தம் உயிரை அர்ப்பணித்தார்கள்.

இவ்வித தியாகபுருடர்கள் பிறந்த ஈழத்தில் சைவத் தமிழர்கள் தம் சமயம் பாஷை முதலியன வீழ்ச்சியுறும் காலத்து அஞ்சா நெஞ்சுடன் விழித்தெழ வேண்டும். சைவ இளைஞர்களே! பாதயாத்திரைக்குப் புறப்படுங்கள். புறமுகத்தில் யாம் செய்யும் யாத்திரையே அக முகத்தில் இறைவன் திருவடியைச் சேருவதற்குச் சிறந்த சாதனையாகும். இந்தத் திருவடி யாத்திரைக்குச் செல்வதற்கு மணிவாசகப் பெருந்தகை; "ஆவா என்னப் பட்டன்பாய் ஆட, பட்டீர்வந் தொருப்படுமின், போவோங்காலம் வந்தது காண் பொய், விட்டுடையான் கழல்புகவே" எனக் கூவி யழைக்கிருர். இத்தகைய பேரருள் வீரம் தமிழருக்கே சிறப்புரிமையாய் அமைந்தனவாகும் ஆதலால் சைவத் தமிழர்களாகிய நாங்கள் சென்ற வருடம்போல் திருஞான சம்பந்த சுவாமிகள் குருபூசைத் தினத்தை முன்னிட்டுப் பாத யாத்திரை செய்யத் தீர்மானித்துள்ளோம். அதில் சிவனடியார்கள், சந்நியாசிகள் பரதேசிகள் முதலானேருடன் சைவ இளைஞர்களையும் வரும்படி கேட்கின்ரேம். இப் பாதயாத்திரைச் சபையினர், சம்பந்தசுவாமிகள் குருபூசைக்கு மூன்று நாட்களுக்கு முன் நல்லை முருகன் ஆலயத்தில் இருந்து மாலை நாலுமணிக்குப் புறப்படுவார்கள். எல்லாம் வல்ல ஸ்ரீகேதீஸ்வரப்பெருமான் திருவருள் பாலிப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

இல. 44/C

G. S. மரியாம்பிள்ளை கைம் பெண் மரியம்மா
பாதுகாப்பு காவலன்.

1, மரியாம்பிள்ளை செல்வத்தியானம்

2, எம்மிலியா லலிதா (மரியாம்பிள்ளை மகள்)

3. S, P. யோச்சு

5-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்,

எதிர் வாதி

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 44/C ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பினனுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ௵ ஆனிமீ 22உ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

யாழ்ப்பாணம் சண்டிக்குளியில் "மாவிலன் கலட்டி" என்னும் காணி நீ இ 8, 10 2/5 அதற்கு சேர்ந்தவைகளும்.

எல்லை கிழக்கு ரோட்டு.

வடக்கு சந்தியாபிள்ளை சவிரிமுத்துவும் வேலுப்பிள்ளை சின்னையாவும்,

மேற்கு வாய்க்கால்

தெற்கு A. V. வயித்தியாம்பிள்ளையும், Dr, G. W. புவிமனசிங்கியும்

" J. மனவல் உலாந்தா அவர்களால் வரியப்பட்ட 379 நம்பர் படத்தில் காட்டிய முதலாம் லொட்டு"

இதில் மேற்குப் புறமாக ஐந்து பரப்பில் 2/3 பங்கு.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்.

யாழ்ப்பாணம்
23-5-57.

M 26 24-5-57

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
வண்ணார்பண்ணை மேற்கு
1 தம்பு இரத்தினசிங்கமும் பெண்
2 மங்கையர்க்கரசி
வழக்காளிகள்

இல. 11172

எதிராக

யாழ்ப்பாணம் செம்மாதெரு காலஞ்சென்ற
1 சிவத்தார் சுல்தான் அப்துல் காதர் அல்லது தம்பிராசா
2 இப்ருகிம் சுல்தான்
3 தம்பிராசா ஜெயினுல் அபிடீன் தனக்காகவும் முதலாம் எதிரியின் ஆதனப் பிரதியாகவும்
4 முகிடீன் பீவி
5 தம்பிராசா முகிடீன் சாயுபு பெண்
6 தாவூட் பீவி
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11172-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு தண்டுக் காணி 1957-ம் ௵ ஆடி மீ 2உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல்வட்டி ரூபா 5933-75 ம் ரூபா 4500 க்கு 26-5-54 தொடக்கம் 21-12-56 வரையும் ரூபா 100 க்கு வருடமொன்றுக்கு 10 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு 22-12-56 தொடக்கம் இறுபடும் வரைக்கும் ரூபா 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 492-72.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை

## அடைவு நகைகள் வெந்தீஸ் விற்பனை

—0—

தா. சி. குமாரசாமி &
ஸ்ரீமதி தா. சி. சோமசுந்தரம்

576/6 அம்மன்கோவில் ரோட்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

மேற்படி அடைவு கடையில் 1955ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதலாந் திகதி தொடக்கம் 1956-ம் ஆண்டு சித்திரை மாதம் 30ந் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாது தவறியிருக்கும் நகைகள் 1957 ம் ஆண்டு ஆனி மாதம் 9-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

போ. இராசரத்தினம்
கொமிஷனர்.

M 25, 24, 31-5-57

---

அணிஞ்சிலடி பர. ஙி, இலா, 1ம் வீடும் கிழக்கெல்லைக் கிணற்றில் பங்கும் அதற்கு சேர்ந்வைகளும் எல்லை கிழக்கு முகமட் இப்ருகிம் அல்லா பிச்சையின் ஆதனம் வடக்கு செம்மாதெரு ஒழுங்கை மேற்கு மூகிதீன் பள்ளிவாசலுக்கும் சுல்தான் பக்கீர் தம்பியின் உரிமைக்காரருக்கும் உரிய ஆதனம் தெற்கு முருகேசர் இராமநாதனின் ஆதனம் இதடங்கலும்.

சே. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்
24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம்
17-5-57,

M. 24 24-5-57

# அணிந்துரை அரங்கம்

### சைவசமயப் புண்ணிய காலம்

ஆக்கியோன்
பண்டிதர் த. சுப்பிரமணியம்

பாணந்துறைக் கந்தர் அந்தாதி இயற்றிய பண்டிதர் த. சுப்பிரமணியம் அவர்கள் சைவ நற்றெண்டாக மக்கள் தெய்வநெறி நிற்பதற்கு ஆலய வழிபாடு அநுட்டானம் முதலியன போல விசேட காலங்களில் விரதம் நோற்றலும் வேண்டப்படும் என்ற மூதறிஞர் கருத்தை விளக்கி 'சைவ சமயப் புண்ணிய காலம் என்ற நூலை ஆக்கியளித்திருக்கின்றனர்.

சைவச்சால்புக்கின்றியமையாது வேண்டப்படுவது இறைவழிபாடு என்ற உண்மையைப் பலவேறு முகமாக எடுத்துக் காட்டி உலகத்தை உய்யும்வழியில் செல்வதற்கு உதவிபுரிவது திருத்தொண்டாகும். அப்பெரும்பணியிலே இந்நூல் அமைந்திருக்கின்றது. சைவப் பாடசாலைகளிலே சமயபாட வேளையில் இவ் வெளியீட்டின் விளக்கம் மாணுக்கர்களுக்கு அறிவுறுத்தப்படுதல் விரும்பத்தக்கது. நூலறிவும் எழுதும் திறனும் பொருந்திய பண்டிதரின் நன்முயற்சி வரவேற்கப்படவேண்டியது. மணி வெளியீட்டின் முதலாவதாகும் இது ஸ்ரீகாந்தாஅச்சகத்தாரால் அச்சிடப்பெற்றது. விலை: ரூபா 1-50.

—0—

# சிதம்பரம் கோயில்

## ஆயிரக்கால் மண்டபப் புனருத்தாரண நிதி

கீழே குறிக்கப்பட்டிருக்கும் அன்பர்கள் சிதம்பரம் கோயில் ஆயிரக்கால் மண்டபப் புனருத்தாரண நிதியின் பொருட்டு எமக்குப் பணம் அனுப்பியிருக்கின்றார்கள்.

| பெயர் | விலாசம் | ரூ. ச. |
|---|---|---|
| ந. ஏகாம்பரம் | திருக்கோயில் (கிழக்குமாகாணம்) | 20 00 |
| இ. சீவர்த்தினம் | பொலிஸ்நிலையம் கொழும்பு | 2 00 |
| சு. இராமலிங்கம் | மாந்தீவு, மட்டக்கிழப்பு | 1 00 |
| ஸ்ரீமதி சி. விசாலாட்சியம்பாள் | | 5 00 |
| சி. மயில்வாகனம், | சிங்கப்பூர் பென்சனர் இணுவில்கிழக்கு | 50 00 |
| நா. விசுவலிங்கம் | நாரந்தனை, ஊர்காவற்றுறை | 20 00 |
| ஸ்ரீமதி சு. பொ. கந்தையா, | 245 நாவலர் ரோட்டு யாழ்ப்பாணம் | 1 00 |
| ஸ்ரீமதி இ. பொ. இராசையா, | அரசடிரோட் யாழ்ப்பாணம் | 1 00 |
| | | 100 00 |

1-4-57, சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்,

இ. பொ. இராசையா
தனுதிகாரி

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 26—5—57 —— 1—6—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

இடைஞ்சல்கள் நீக்கப்படும். புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். சகோதர சகோதரிகளிடமிருந்து உதவிக்கும் எதிரிகளுக்கு அழிவுக்கும் இடமுண்டு. ஆனல் குடும்பக் கருமங்கள் அதிகம் நல்லாயிருக்கமாட்டா.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

பணநிலைமைகள் திருந்த வேண்டும், மாதாவழி இனத்தவர் அதிக உதவியாயிருப்பர். பகைவர் அழிவும் புகழும் நிச்சயம். ஆனல் குடும்பச் சூழலில் பிழை எண்ணங்களுக்கிடமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

கருமங்களை இந்தவாரம் நீர் அமைதியான நிலைமையிற் கையாளக்கூடியதாயிருக்கும், செலவதிகரிக்கும் ஆனல் திடமான வருவாயும் நிச்சயம். எதிர்ப்பு நீங்கிவிடும். மாறுபட்ட சார்புடைமை வாரஇறுதியில் உம்மை உணர்ச்சித் துறையிற் குழப்பக்கூடும்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

தனலாபம் நிச்சயம். சில கடன்களை நீக்கி நீர் இடைஞ்சல்களிலிருந்து நீங்கக்கூடியதாயிருக்கும். நண்பர் அதிக உதவியாயிருப்பர். ஆனல் தேகசுகம் நல்லாயிருக்கமாட்டாது.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்,

உம்முடைய சொந்தக் கருமங்களில் பிறர் தலையிடுதல் இந்த வாரம் அதிகமாயிருக்கக் கூடும். இயன்றளவுக்கு மேலதிகாரிகளுடன் சண்டைகளைத் தவிர்க்கவும். தேவையில்லாத பழி உம்மிற் சுமத்தப்படும்,

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உத்தியோகக் கருமங்களுக்கு ஒரு நல்ல வாரம். வேலை கூடுதலாயிருக்கும், ஆனல் மனச்சமாதான மிருக்கமாட்டாது. கதை பரப்புவோரைப் பற்றிக் கவனமாயிருக்கும். வாரத்தின் முதன் மூன்று நாட்கள் கவனமாய்க் கழிக்கப்படுதல் வேண்டும்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

சுகவீனங்களுக் கிடமுண்டு. கடுமையான சுகவீனமொன்று உமக்குண்டாகக்கூடும். மனக்குழப்பத்துக்குமிடமுண்டு, புது முயற்சிகள் உமக்கு அதிக செலவையுண்டாக்கும். நண்பர் அதிக உதவியாயிருப்பர். செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

உம்முடைய உத்தியோக கருமங்கள் அல்லது வியாபாரக்கருமங்கள் சிறிது காலத்துக்குக் குழப்பமாயிருக்கும். நீர் உண்டாக்கும் மாற்றங்கள் பெருஞ் செலவுண்டாக்குபவையாகும். மனத் துன்பங்களுக்குமிடமுண்டு. வியாழன் பிற்பகல், வெள்ளி சனி எல்லாவற்றிலும் பழுதானவை.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்,

தேக சுகம் திருந்த வேண்டும். ஆனல் குடும்பச்சூழலிற் பிழை எண்ணங்களுக்கிடமுண்டு. உத்தியோகத்துறையில் ஒரு நல்ல வாரம். தனலாபங்களும் புகழும் நிச்சயம்,

**மகாராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்த வாரம் மனச்சமாதானமிருக்கமாட்டாது. நீர் இந்த வாரம் அதிக எதிர்ப்பை முன்னிட வேண்டி வரும். ஆனல் நீர் அவற்றை வெல்லக்கூடியதாயிருக்கும். இனத்தவர்களிலும் பார்க்க அன்னியர்களும் அறியாதவர்களும் கூடிய உதவியாயிருப்பர்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

கல்வி முயற்சிகளிற் சித்தியும் புகழும் நிச்சயம், கூடிய மனச்சமாதானமுண்டாகும். நெருக்கடி குறையும். தனலாபமும் குடும்பச் சமாதானமும் நிச்சயம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

புதுமுயற்சிகள் நல்ல பலனைத் தரும், ஆனல் ஆரம்பத்தில் அதிக எதிர்ப்பை நீர் முன்னிட வேண்டி வரும். வழக்குகள் பற்றிக் கவனமாயிருக்கவும். செலவும் அதிகரிக்கும்.

## தேகவியோகம்

அல்லைப்பிட்டி இளைப்பாறிய உடையார் திரு. வைத்தியலிங்கம் செல்லத்துரை அவர்களின் அருமை மனைவியார் திருமதி. சொர்ணம்மா அவர்கள் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து சென்றசனிக்கிழமை இரவு இவ்வுலக வாழ்வை நீத்தார். ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுற்றமித்திரர் பெருந்தொகையினர் முன்னிலையில் அவருடைய ஈமக் கிரியைகள் சைவமுறைப்படி மிகவும் சிறப்பாக நடைபெற்றன. புத்திரர் தவவியைகன் வேலாயுதபிள்ளை நடேசபிள்ளையுடன் புத்திரிகள் தையல்நாயகி, சிவயோகலட்சுமி, நடேஸ்வரியும் மருமக்கள் ஞானசம்பந்தன்' இரத்தினசபாபதி கிருஷ்ணம்பாள், இராசம்மாவும் பேரப்பிள்ளைகளும் மற்றும் வழித்தோன்றல்களாயுள்ளோர்பலரும் அவர் பிரிவால்வருந்துவாராயினர்

## ஐயனர் கோவிலடி சனசமூக நிலையம்

ஐயனர் கோவிலடி சனசமூக நிலையத்தை 20-4-57 சனிக்கிழமை பரமேஸ்வரக் கல்லூரி ஆசிரியர் திரு. செல்வத்துரை அவர்கள் திறந்து வைத்தார். அவர் பேசும்போது "கல்வி அறிவு, ஒழுக்கம் இவை தான் இளைஞர்களை முன்னேற்றக் கூடிய அருங் குணங்களாகும். இக்குணங்களைக்கொண்டு இளைஞர் தங்கள் வாழ்க்கையில் பெரும் நன்மையை அடையலாம் என்று கூறினர். திரு. T. S. துரைசாமுதலிய பலர் இவ்விழாவுக்குச் சமுகமளித்தனர்.

---

சமூகத்துறையிலும் பிறவாறும் சேவை செய்து விளங்கிய அம்மையார் இறைவன் திருவருளால் ஆன்மசாந்தியடைவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேக்கிழார் குருபூசை

நாள் : ஏவிளம்பி ஞு வைகாசி மீ உ0 உ (2-6-57) ஞாயிற்றுக்கிழமை.

இடம் : சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

முற்பகல் 9 பி 1½ கடவுளாராதனை
புராணபடனம் சேக்கிழார் புராணம்
மாகேசுர பூசை

இரவு 6½—7 விரிவுரைக் கூட்டம்:

தலைவர் பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர்
6—7½ தமிழ்மறையோதல்
ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக் குருக்கள்
7½— பிரசங்கம்
"சேக்கிழாரும் சைவமும்"
திரு. செ. சின்னத்துரை B, A.
"சேக்கிழார் கவி இன்பம்"
திரு. பொ. கருணாகரர்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 21-5-57.

## புறநானூற்றில் நட்புச் சிறப்பு

4-ம் பக்கத் தொடர்ச்சி

இவ்வாறு பல சிற்றரசர்களை அடுத்து வேண்டியும் கபிலரின் முயற்சி வெற்றி பெறவில்லை. எனவே திருக்கோவலூரின் கண்ணேபார்ப்பாரிடத்திலே அப்பெண்கள் இருவரையும் அடைக்கலமாக வைத்தார். அதன் பின்பு தனது உயிர் நண்பனுகிய பாரியின் பிரிவாற்ருது உண்ணு நோன்பிருந்து உயிர்விடத் துணிந்தார். அப்போது அவர் கூறியதாக வரும் பாட்டு மிகவும் உருக்கமுள்ளதாக இருக்கின்றது. "பாரியே நீ என்னேடு பெரு நட்புப் பூண்டிருந்து உயிர் கலந்தொன்றிய கேண்மையுடையனய் ஒழுகினுய் ஆயின் நீ இறக்கும் கால் என்னையும் உடனழைத்துச் சென்ருயல்லை. யான் உனக்குப் பொருந்தாதவன் போலும்? எவ்வாருயினும் "இம்மையே போலக் காட்டியும் மை இடையில் காட்சி நின்னேடு, உடனுறை வாக்குக உயர்ந்த பாலே" எனக் கூறப்படும் அடிகள் சிறந்த நட்பை எடுத்துக்காட்டுவனவாகும்.

பாரியினதும் கபிலரினதும் சிறந்த நட்பின் தன்மை புறநானூற்றின் கண்ணே காணக்கூடிய

## தென்மராட்சியில் இசை விழா

தென்மராட்சி இசைக் கலை மன்றத்தின் ஆதரவில் புதன்கிழமை 15-5-57 தொடக்கம் மூன்று நாள் சாவகச்சேரி வாரிவனநாதர் சிவன்கோயிலின் திருமுன்றிலில் இசைவிழா நன்கு நடைபெற்று நிறைவுற்றது. திரு. என். சண்முகரத்தினம் முதலிய பல இசைவல்லுனர்கள் நிகழ்ச்சிகளிற் பற்குபற்றி விழாவைச் சிறப்பித்தனர். இசையிற் பெரும் ஊக்கத்தைத் தென்மராட்சிப்பகுதியில் இவ்விழா உண்டாக்கியுள்ளது என்று பலர் கருதுகின்றனர்.

---

தாய் அமைந்துள்ளது. அதன் ஒரு பகுதி இங்கே கண்டோம்.

## இம்மை மறுமை

1-ம் பக்கத் தொடர்ச்சி

மேன்மையடையவழி பிறக்காது. நிர்வாகத் திறமையும் நற்பண்புமுடைய பெண்கள் இல்லறத்தில் இணைவார்களாயின் இல்லறத்தில் எக்குறைவுகள் தான் நேர்படினும் நிறைவாகவே தோன்றும். இதனை மக்கள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த வள்ளுவனரும்,

"இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணுக் கடை"

என்று இல்லாளின் இயல்பை எடுத்துக் காட்டும் பொழுது எடுத்துக் கூறினர். இது பொய்யாமொழி

## கேள்விபற்றிய அறிவித்தல்

1. மானிப்பாய்க்கிராமச்சங்க அக்கிராசனரால் 1957ம் ஆண்டு வைகாசி மாதம் 25ந் திகதி காலை 10 மணிவரை சுதுமலைக் கிணற்றுக்கு "சீல்" வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்,

2. கேள்விகள் கிராமச்சங்கக் கந்தோரில் அதன் பொருட்டு வைக்கப்பட்டிருக்கும், கேள்விப் பெட்டியில் போடப்படுதல் வேண்டும். அல்லது கிராமச்சங்க அக்கிராசனரின் விலாசத்துக்கு பதிவு தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது 25-5-57 காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கும் கிராமச் சங்கக் கூட்டத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

3. கேள்விகள் உத்தியோகப் பூர்வமான பத்திரங்களில் எழுதிக் கொடுக்கப்படுதல் வேண்டும். அப்பத்திரங்கள் அதன் பொருட்டு ரூபாய் இருபத்தைந்து பிணை கட்டப்பட்டதும் கிராமச் சங்க அக்கிராசனரால் வழங்கப்படும்,

4. கேள்விகளில் உள்ள சகலமான மாற்றங்களும் அழித்தல்களும் கேள்விக்காரரின் கையொப்பத்தால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

5, அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று கிராமச் சங்க அக்கிராசனரால் அறிவிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு வேலை ஆரம்பிக்கத் தவறும் எக் கேள்விக்காரரதும் கேள்விப் பிணைப்பணமான ரூபா இருபத்தைந்து திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

முதலியார் வை. மகேசன்
தலைவர்,
கிராம சங்கம், மானிப்பாய்.
கி. ச. கந்தோர்,
மானிப்பாய்,
17-5-57.
ஐ 23 24-5-57

## தேவை

சபையின் சைவப்பிரகாச அச்சகத்திற்கு சைவசமய நூல்களிலும் தமிழிலும், பாண்டித்தியம் அடைந்தவரும், ஆங்கில அறிவுடையவருமாகிய ஒருவர் நூல் பிரசுர ஆசிரியராகத் தேவை. சபைக் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். தராதரத்துக்கேற்ற வேதனம் கொடுக்கப்படும்.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14



இந்தியாவில்

# 35 நாள்! 6000 மைல்!!

காசி யாத்திரையும்
ஆனி உத்திர சிதம்பர தரிசனமும்

—★—

சேது, இராமேஸ்வரம், மதுரை, திருப்பரங்குன்றம், பழனி, பங்களூர், மைசூர், மதருஸ், திருப்பதி, பம்பாய், எல்லோரா, ஆக்ரா, மதுரா (பிருந்தாவனம்) டெல்லி, அரித்துவாரம், லக்னே, அயோத்தி, அலகபாத், பனரிஸ் (காசி) காயா, கல்கத்தா, பூரி, சிதம்பரம் ஆகிய இடங்களைப் பார்த்து அங்குள்ள

இந்துமத பழம் பெரும் கோயில்கள் — புனித தீர்த்தங்கள் —இந்திய புராதன கலைச்செல்வங்கள் — அகிலஇந்திய கலாச்சாரம் முதலியவைகளை அறிந்துவர

கட்டண விபரம் (இருநேர தாவரபோசன வசதியுடன்)

| | | |
|---|---|---|
| முதலாவது வகுப்பு | ரூபா | 625-00 |
| இரண்டாவது வகுப்பு | | 475-00 |
| மூன்ருவது வகுப்பு | | 350-00 |

இலங்கையிலிருந்து புறப்படும் திகதி 27-5-57


(இதுவே மலிவு டிக்கட்டின் கடைசி மாதம்)

★ இவ்வரிய பொன்னன சந்தர்ப்பத்தைத் தவற விட்டுப் பின் துன்புருதீர்கள்.

குறிப்பிட்ட அளவு யாத்திரீகளுக்கே இட வசதி உண்டென்பதையும் இலங்கைப் பிரஜைகள் மட்டுமே இதில் பங்கு பற்றலாம் என்பதையும் முன்னரே அறியத் தருகின்ரேம்.

☞ பாஸ்போட்—விசா மற்றும் விபரங்களுக்கு இன்றே எம்மிடம் வாருங்கள்; அல்லது எழுதுங்கள்.

விவேகானந்தா டிரேட்ஸ் கோப்பறேஷன்
மலாயா – சிங்கப்பூர் – இந்தியா பிரயாண வசதி செய்பவர்கள்
31, கே. கே. எஸ். ரேட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
(பெரியகடைச் சத்திரத்திற்கு மேற்குப் பக்கம்)
தந்தி: "சென்றவேல்" Grams "CENTRAVEL"


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு, சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால் 24-5-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org